


விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் ரூ.244.20 இலட்சம் மதிப்பில் மாவட்ட நகர் மற்றும் ஊரமைப்பு அலுவலக புதிய கட்டட கட்டுமானப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை மற்றும் மின்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.



தியாகசீலர் கக்கன் அவர்களின் 115வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் தும்பைப்பட்டி கிராமத்தில் உள்ள தியாக சீலர் கக்கன் அவர்களின் மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடன் உள்ளனர்.

### ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் –

# பிரகலா பிரபாகரே தனது நூலில் பா.ஜ.க. அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்துள்ளார்!

## ‘விடுதலை’ நாளேடு தலையங்கம்!

*சென்னை, ஜூன் 20-*

எதிர்க்கட்சிகளை ஒடுக்கி அச்சுறுத்த சி.பி.ஐ, அமலாக்கத்துறை ஆகியவற்றைப் பயன்படுத்தி வழக்குத் தொடுப்பது பி.ஜே.பி.யின் அராஜக அணுகுமுறை என்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரான பிரகலா பிரபாகரே ‘The crooked Timber of New Delhi’ என்ற நூலில் பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்தெறிந்துள்ளார் என ‘விடுதலை’ நாளேடு 18.6.2023 தலையங்கத்தில் எழுதியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

தமிழ்நாடு அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களை நெறிமுறைகளுக்கு மாறாக அராஜக முறையில் கைது செய்த ஜனநாயக விரோத பழிவாங்கும் எதேச்சதிகாரத்தைக் கண்டித்து கோவையில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மட்டுமல்ல, அரசமைப்புச் சட்ட நெறிமுறை நாகரிகத்தை விரும்புகிற ஒவ்வொருவரின் உணர்வினை வெளிப்படுத்தும் ஜனநாயகக் கோட்பாட்டின் வெளிப்பாடாகும்.

அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்கு, ஏதோ தி.மு.க. ஆட்சியில் அமலாக்கத் துறையால் தொடரப்பட்டது போன்ற தோற்றத்தை உருவாக்குவது அரசியல் நோக்கம் கொண்டதாகும்.

பத்து ஆண்டுகளுக்குமுன் தொடரப்பட்ட வழக்கு, இப்பொழுது இறக்கை கட்டிப் பறந்து பழிவாங்கும் முறையில் கொத்துவது ஏன்? அதுவும் நள்ளிரவில் நடத்தப்பட்ட கோரமான மூர்க்கத்தனமான செயல் இது என்று பொது நிலையில் உள்ளவர்கள் கூடக் கருதும் நிலையை ஒன்றிய அரசின் ஏவல்படையான அமலாக்கத் துறை ஏற்படுத்தி விட்டது.

இதில் அ.இ.அ.தி.மு.க. நடந்துகொள்ளும் விதம் கேலிக்குரியது மல்லாக்கப்படுத்து எச்சில் துப்பும் இழிதன்மையைச் சார்ந்தது.

செந்தில்பாலாஜி ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இருப்பது ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தானே! அதைக்கூட சற்றும் சிந்திக்காமல் அப்பட்டமான அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க. நடந்து கொள்ளலாமா?

தி.மு.க. ஆட்சியில் அமைச்சர் செந்தில் பாலாஜி ஊழல் செய்தார் என்ற வழக்கின் அடிப்படையிலா கைது செய்யப்பட்டுள்ளார்?

சென்னைத் தலைமை செயலகத்திற்குள் புகுந்து அமலாக்கத்துறை அதிகாரிகள் அமைச்சரின் அறையில் சோதனை செய்வது என்பது முதல் அமைச்சர் கூறியுள்ளது போன்று அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை என்பதல்லாமல் வேறு என்னவாம்.

கோவை பொதுக்கூட்டத்தில் பேசிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எந்தக் கருத்தை முன் வைத்தனர்?

அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம் செய்திருந்தால் சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவறு என்று சொல்லவில்லையே!

10 ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கூறப்படும் குற்றத்தின் மீது, எந்தவித தார்மீக நெறிமுறைகளையும் பின்பற்றாமல் அமலாக்கத்துறை நடந்து கொண்ட முறையைத்தான் அழுத்தமாகக் கண்டித்துள்ளனர்.

2016 டிசம்பரில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தலைமைச் செயலாளர் ராம் மோகன்ராவ் அறையில், தலைமைச் செயலகத்தில் திடீர் என்று புகுந்து சோதனை செய்ததை அ.இ.அ.தி.மு.க. ஏற்றுக் கொண்டதா? அப்பொழுதுகூட அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் அமலாக்கத்துறையின் அத்துமீறிய, மாநில உரிமையைக் காலில் போட்டு மிதித்த அந்த அடாவடித்தனத்தை கண்டிக்கத்தானே செய்தார்; அ.தி.மு.க. ஆட்சியில் தானே நடந்தது என்று அரசியல் ஆதாயக் கண்ணோட்டமின்றி நடந்து கொண்ட கண்ணியத்தை ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

சி.பி.அய்., வருமான வரித் துறை, அமலாக்கத்துறைகளை இன்றைய ஒன்றிய பி.ஜே.பி. அரசு பயன்படுத்தும் விதம் உலக அரங்கில் இந்தியாவைத் தலைகுனிய வைத்து விட்டதே!

குஜராத் கலவரம் நடந்த கால கட்டத்தில் (அப்பொழுது முதல் அமைச்சர் நரேந்திர மோடியே) அன்றைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி என்ன சொன்னார்?

“எந்த முகத்தை வைத்துக்கொண்டு வெளிநாடு செல்லுவேன்?” என்று புலம்பினாரே, அந்த நிலைதானே இப்பொழுது நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பி.ஜே.பி. அரசிலும் நடந்திருக்கிறது.

கோவைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திராவிடர் கழகத் தலைவர் எடுத்துக் காட்டிய ஒரு தகவல் மேடையில் அமர்ந்திருந்த தலைவர்களுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கே அனேகமாக புதிய வெகு சமீபத்தில் வெளிவந்த ஒன்றாகும்.

பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கு அச்சுறுத்துவதற்கு, சி.பி.அய். வருமான வரித் துறை அமலாக்கத் துறைகளைப் பயன்படுத்தி வழக்குத் தொடுத்து சிறையில் தள்ளும் இது ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியின் அராஜக அணுகுமுறை என்பது குறித்து அண்மையில் வெளிவந்த “The Crooked Timber of New India” என்ற நூலில் இருந்து ஆதாரத்தை எடுத்துக்காட்டினார் ஆசிரியர் மானமிகு கி. வீரமணி அவர்கள்.

இந்த நூலை எழுதியவர் யார் தெரியுமா? ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பிரகலா பிரபாகர் என்பவர்தான் என்று சொன்னபோது அதிர்ச்சி ஒரு பக்கம், ஆரவாரம் மற்றொரு பக்கம் என்று மக்கள் கடல் ஆர்த்து எழுந்தது.

எதையும் ஆதாரத்துடன் மேடையில் பேசும் நமது தலைவர் ஆசிரியர் அவர்கள் இந்த வகையில் மேலும் ஒரு அசாதாரண அருமையான முத்திரையைப் பொறித்து ஒன்றிய பாசிச பி.ஜே.பி. அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்தார்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதுதான் இன்றைய ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியின் நிலை!

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வரலாற்று நாயகர் தலைவர் கலைஞர் புகழ்பாட

# திருவாரூர் நோக்கி மீனவ மக்களே திரண்டு வாரீர்!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள்!

*சென்னை, ஜூன் 20-*

“வரலாற்று நாயகர் தலைவர் கலைஞர் புகழ்பாட திருவாரூர் நோக்கி மீனவ மக்களே திரண்டு வாரீர்” என்று கழக மீனவர் அணி செயலாளர் டாக்டர் அ. ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் தொடர்ச்சியாக இன்று (20-06-2023 செவ்வாய் கிழமை) நடைபெறுகிற கலைஞர் கோட்டம், முத்துவேலர் நூலகம் திறப்பு விழா நிகழ்வில் மீனவ மக்கள் வெகுவாக கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறேன்.

இருள் சூழ்ந்து கிடந்த கடற்கரை கிராமங்களுக்கு மின்சாரம் கொண்டுவந்தவர் தலைவர் கலைஞர். மீனவமக்களுக்கு ஒலைகுடிசைகளிலிருந்து கான்கிரீட் வீடுகள் அமைத்து தந்தவர் தலைவர் கலைஞர்.

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரால் மீனவ கிராமங்கள் தோறும் தொகுப்பு வீடுகள் அமைத்து பட்டா தந்தவர் தலைவர் கலைஞர். கடற்கரைக் கிராமங்களில் மீன்விற்பனை கூடங்கள் அமைத்து, அதில் மின்சார விளக்கு களையும் தந்தவர் தலைவர் கலைஞர்.

மீனவக் கிராமங்களிலிருந்து தொலைதூரம் நடந்து சென்று துயருற்ற மக்களுக்காக அனைத்து கிராமங்களுக்கும் அரசு பேருந்துகளை இயங்க ஆணை பிறப்பித்தவர் தலைவர் கலைஞர்.

மீனவ மக்களுக்கு எட்டாத தொலைவில் இருந்த கல்வியை கடற்கரை கிராமங்களுக்கே அரசு பள்ளிகளை கொண்டு வந்து ஏழை எளிய மீனவ மக்களின் வாழ்வில் அறிவு விளக்கை ஏற்றிய நிகரற்ற தலைவர் கலைஞர். மீன்பிடிபடகு விசை எந்திரங்களுக்கு டீசல் மானியம் தந்தவர் தலைவர் கலைஞர். மீனவர்களுக்கு மீன்பிடி தடைகால நிதி உதவித் தொகை திட்டம் தந்து மீனவர்களை பாதுகாத்தவர்தலைவர் கலைஞர்.


1969- முதல் தலைவர் கலைஞர் தலைமையில் கழக ஆட்சி அமைந்த காலங்களிலெல்லாம் மீனவர்களின் பொற்கால ஆட்சியாக, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றும் ஆட்சியாக திகழ்ந்தது அத்தகைய தலைவரின் நூற்றாண்டு நிகழ்வில் மீனவ மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் அழைக்கிறேன்.

தன் வாழ்நாளெல்லாம் மீனவ மக்களின் வாழ்வுக்காக உயர்வுக்காக வாழ்வாதாரத்திற்காக பல்வேறு திட்டங்களை தாயுள்ளத்தோடு வாரி வழங்கிய பாரிவள்ளல் தமிழினத்தின் தன்னிகரில்லா தலைவர் கலைஞர் அவர்களின் தமிழினத் தொண்டு எவராலும் ஈடு செய்ய முடியாதது. அப்படிப்பட்ட கலைஞர் பெருந்தகையின் புகழ் பாட திருவாரூர் நோக்கி திரண்டு வாரீர்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மீஞ்சூர் மு. கேசவன்**
**ஜூன் 20 (2019)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.**

**பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## இயற்கை எய்தினார்



**ஈரோடு சூர்யா தொழிலக குடும்பத்தினரின் தாயாரும்,**
ஈரோடு தெற்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் **ஆ.செந்தில்குமார்** அவர்களின் தாயாரும்,
மாவட்ட மாணவர்அணி அமைப்பாளர் **ஜெ.திருவாசகம்** அவர்களின் ஆயாவும்,
காலம்சென்ற **பாலுசாமி (எ) கு.ஆறுமுக முதலியார்** அவர்களின் மனைவியுமான

# திருமதி. ஆ.பொன்னம்மாள்

அவர்கள் தனது 87வது வயதில் **17.06.2023 சனிக்கிழமை** மாலை 6.15 மணியளவில் **ஈரோடு, திண்டல், தெற்குபள்ளம் ரோடு, லட்சுமி கார்டனில்** உள்ள தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவண்

மகன்கள் : **ஆ.ஜெயகுமார் - J.தேன்மொழி (எ) விஜயா**
**ஆ.மனோகரன்** முன்னாள் வார்டு பொறுப்பாளர் - **M.ராஜேஸ்வரி**
**ஆ.வைரமணி,** முன்னாள் வார்டு செயலாளர் - **V.சித்ரா**
**ஆ.செந்தில்குமார் B.Com., - சு.ரேவதி M.Sc., M.Phil.,B.Ed.,**
ஆசிரியை, **BVB பள்ளி,** திண்டல்.

மகள் : **R.வாசுகி - K.ராமச்சந்திரன் B.A.,** அம்பிகா டெக்ஸ்டைல்ஸ், ஈரோடு.

பேரன், பேத்திகள் : **ஜெ.திருவாசகம் ME., - N.பவித்ரா B.Tech** TJ வென்சர்ஸ், ஈரோடு.
**ஜெ.குட்டி மணி (எ) கோவேந்தன் BE., - M.ராஜநந்தினி B.E.,**
S.T இன்ஜினியரிங், சிங்கப்பூர்.
**ம.செவ்விளம்பரிதி B.Sc., MBA.,- பா.பவித்ரா B.Com.,**
**ச.சங்கமித்திரை M.Com - S.சந்தோஷ்குமார் B.E.,**
**ம.தமிழன்பன் BE., ரா.கவின்பாலாஜி B.E.,**
**ரா.கீர்த்திஸ்வர் B.Sc., MCA., வை.குறளமுதம் B.Sc.,**
**செ.குறளோவியம் M.Sc., செ.செங்கதிர், தி.மெல்லிசை, தி.யாழிசை**

மற்றும் **பணியாளர்கள், சூர்யா தொழிலகம்,** ஈரோடு.